முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 625/2023

பி.வா.சா.1 / சவிதா /10.10.2025

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

இவ்வழக்கின் சொத்து விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி என் மாமனார் என்றால் சரிதான். நானும் 1ம் பிரதிவாதியும் கூட்டுக்குடும்பமாக தான் வசிக்கிறோம் என்றால் இல்லை. தனியாக தான் வசித்து வருகிறோம். தாவா சொத்து கிரயம் செய்த போது கூட்டுக்குடும்பமாக வசித்துவந்தோமா என்றால் இல்லை. அப்போதும் தனியாக தான் வசித்து வந்தோம். என் மாமானராக 1ம் பிரதிவாதி எந்த விலாசத்தில் வசிக்கிறார் என்று கேட்டால் கே.பெரியசாமி, மோகன்தியேட்டர் வீதி, சாமத்தோட்டம், குன்னத்தூரில் வசித்து வருகிறார். கதவு எண் சரியாக ஞாபகம் இல்லை. நானும், 1ம் பிரவாதியும் ஒரே தெருவில் வகிக்கிறோமா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் முன்பு விவசாயம் செய்து வந்தார். தற்போது வேலைக்கு எதுவும் செல்லவில்லை. 1ம் பிரதிவாதி குன்னத்தூர் கூட்டுறவு வங்கியில் தலைவராக இருந்தாரா என்றால் இருந்தார். தற்போது இல்லை. எந்த காலகட்டத்தில் எத்தனை ஆண்டுகாலமாக அவ்வாறு தலைவராக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேலும் அவர் அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இருந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2017ம் ஆண்டு வரை என் மாமனார் சக்தி பைனான்ஸ் என்ற பெயரில் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் கணவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் போர்வெல் லாரி வைத்து தொழில் செய்து வருகிறார். நான் இல்லத்தரசி ஆவேன். வாதிகள் முனியப்பன் மற்றும் ஈஸ்வரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர்கள் எனது வீட்டிற்கு வந்த வகையில் தெரியும். வாதிகள் தாவா சொத்தை எப்போது கிரயம் பெற்றார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் 28.04.2007ம் ஆண்டில் தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகள் என் மாமனரான 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு கொடுத்த தேதி 12.12.2007 ஆகும். நான் 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தை பொறுத்து 14.12.2007ம் தேதியில் ஒரு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தினேன் என்றால் சரிதான். அதாவது என் மாமனார் பொது அதிகாரம் பெற்ற

இரண்டாவது நாளில் நான் அவரிடம் கிரய ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கிரய ஒப்பந்தம் போடும் போது சொத்தில் வில்லங்கம் உள்ளதா என்பதை பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. எவ்வளவு தொகைக்கு கிரய ஒப்பந்தம் போடப்பட்டது என்று கேட்டால் ரூ.9,50,000/-க்கு கிரயம் பேசப்பட்டது அதில் முன்தொகையாக ரூ.2,00,000/-ஐ கிரய ஒப்பந்த தேதியன்று என் மாமனாரிடம் கொடுத்தேன். அந்த கிரய ஒப்பந்தத்தின் படி காலக்கெடு எவ்வளவு என்றால் ஞாபகம் இல்லை. பின்னர் 14.12.2007 ல் ஏற்பட்ட கிரய ஒப்பந்தத்தை 07.01.2009 தேதியில் இரத்து செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். என்ன காரணத்திற்காக அது இரத்து செய்யப்பட்டது என்று கேட்டால் என் அப்பாவிற்கு உடல்நல குறைவு ஏற்பட்டு சுயநினைவின்றி சிகிச்சையில் இருந்து காலமாகிவிட்டார். அதனால் இரத்து செய்யப்பட்டது. அவ்வாறு இரத்து செய்யப்பட்ட அதே தினமான 07.01.2009 ம் தேதி மீண்டும் ஒரு கிரய ஒப்பந்தம் 1ம் பிரதிவாதியுடன் ஏற்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறான இரண்டாவது கிரய ஒப்பந்தம் எவ்வளவு தொகைக்கு போடப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. இரண்டாவது கிரய ஒப்பந்தத்திலும் மொத்த கிரய தொகையாக ரூ.9,50,000/- தான் காட்டப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. கிரயம் ஒப்பந்த தேதியன்று தாவா சொத்துக்கான அரசாங்க வழிகாட்டி மதிப்பு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இரண்டு கிரய ஒப்பந்தங்களையும் யார் தயார் செய்தார்கள் என்றால் என் மாமனாருக்கு தான் தெரியும். இரண்டாவதாக ஏற்படுத்தி கொண்ட கிரய ஒப்பந்தம் 03.01.2011 ம் தேதி கால நீட்டிப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு கிரய ஒப்பந்தங்கள் ஏற்படுத்தியதும், 03.01.2011 ல் கால நீட்டிப்பு செய்ததும் வாதிகள் கடனை திருப்பி செலுத்துகிறார்களா என்பதை பார்ப்பதற்காக தான் என்றால் சரியல்ல. வாதிகள் கடனை திருப்பி செலுத்த மாட்டார்கள் என்பதால் தான் 14.11.2011 ம் தேதியில் தாவா சொத்தை என் மாமனார் என் பெயரில் கிரயம் பதிவு செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. முதலாவது கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தும் போது தாவா சொத்தில் குடோன் இருந்தது என்றால் சரிதான். அந்த குடோனை 1ம் வாதியின் முனியப்பனின் அண்ணன் முருகன் என்பவர் தான் பராமரித்து வந்தார் என்றால் இல்லை. அந்த குடோனில் இரும்புதளவாடங்கள் இருப்பில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் அந்த குடோனை எப்போது சென்று பார்த்தேன் என்றால் நான் கிரய ஒப்பந்தத்திற்கு முன்பே பார்த்தேன். நான்

பார்க்கும் போது வாதிகளின் சுவாதினத்தில் தான் தாவா சொத்து இருந்தது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரம் வாதிகள் என் மாமனாருக்கு எழுதி கொடுத்தது என்றால் சரிதான். அதில் கண்டுள்ள முத்திரைத்தாள் வாங்கப்பட்ட தேதி 12.12.2007 ஆகும். பி.வா.சா.ஆ.2 வாதிகள் என் மாமனாரிடம் இருந்து கிரய தொகை பெற்று கொண்டதற்கான வர்த்தமான லெட்டர் என்றால் சரிதான். அதில் கண்டுள்ள முத்திரைத்தாள் வாங்கப்பட்ட தேதி 12.12.2007 ஆகும். பி.வா.சா.ஆ.1 ன் முத்திரைத்தாளின் எண்.14367 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ன் முத்திரைத்தாளின் எண்.14372 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 உள்ள வாசகம் முழுவதும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அதில் ஆவண ஏற்படுத்தி கொண்ட தேதியும் தொகையும் கைப்பட எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(இருதரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.10.10 18:05:21 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.